©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 8]

சென்னை, புதன்கிழமை, மார்ச் 3, 2010
மாசி 19, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது ; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்டம் எண் 3/2010**

**1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.

2. 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் "முப்பத்து மூன்று ஆண்டுகள் எட்டு திங்களுக்கு'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "முப்பத்து நான்கு ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12–ஆம் நாளன்று குடியரசு தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

## சட்டம் எண் 13/2010

### 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலி வகை மரங்கள் (பாதுகாப்புச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம் 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலி வகை மரங்கள் (பாதுகாப்பு) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலி வகை மரங்கள் (பாதுகாப்புச்) சட்டத்தின் 1–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவில், ‘‘பதினைந்து ஆண்டுகள்’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘முப்பது ஆண்டுகள்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 1/1995.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.